**ISSN : *2456-821X*** **அவையம் 1 (2) 2017 P.No. : *84 - 90***

புதிய அவையம்

## பெண் ஆளுமைகள் குறித்த கருத்தாக்கங்கள்
### (திலகவதியின் 'கல்மரம்' புதினத்தை முன்வைத்து)

***முனைவர்.சு.அம்பேத்கார்***
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி(தன்னாட்சி), திருப்பத்தூர்*

***கட்டுரை பெறப்பட்டது: 06.12.2017*** ***ஏற்கப்பட்டது : 18.12.2017***

#### முன்னுரை

ஆளுமை என்பது ஒருவரிடத்தில் காணப்படும் நடத்தைகளையும், திறன்களையும் குறிக்கிறது. ***"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது"*** அரிதாகப் பிறந்த மனிதன் இயற்கையன்னையின் செல்லப்பிள்ளையாகவும், படைப்புக்களின் மணிமகுடமாகவும், பரிணாம வளர்ச்சியின் சிறந்த மேன்மையடைந்தவனாகவும் வர்ணிக்கப்படுகின்றான். இயற்கை அவனுக்குச் சிந்திக்கும் ஆற்றலை அளித்துள்ளதால் அவன் தன் உழைப்பையும், அறிவையும் சரியான முறையில் பயன்படுத்திய காரணத்தினால், விலங்கிலிருந்து வேறுபட்டு உயர்ந்தான். போராட்டங்கள் எல்லாவற்றையும் தன் அறிவுத்திறனாலும், ஆற்றலாலும் கடந்து, நாகரிகம், பண்பாடு வளர்ச்சியில் மேம்பட்டு, இன்றைய கணினி உலகைப் படைத்துள்ள திறனே மனிதச் சாதனையின் மிகப்பெரிய வெற்றியாகும்.

பன்னெடுங்காலமாகவே ஆளுமை என்பது உடல் சார்ந்தே தோன்றுவதாகக் கருதப்படுகிறது. தந்தை வழிச்சமூக மரபுகள் உடல் அமைப்பைக் கொண்டே ஆண் பெண் இருபாலருக்கும் மாறுபட்ட ஆளுமைப் பண்புகளை இலக்கணமாகக் கற்பித்துள்ளனர். உடல் அமைப்பில் ஆண் வலியவன் என்பதால் அறிவு, அஞ்சாமை, கடும் உழைப்பு, நிர்வாகத்திறன் ஆகியவை ஆணுக்குரிய ஆளுமைப்பண்பாகவும், பெண் மென்மையானவள் என்பதால் பேதமை,

அச்சம், அடங்கியிருத்தல், நாணுதல் ஆகியவை பெண்ணுக்குரிய ஆளுமைப் பண்புகளாகவும் கற்பிக்கப்பட்டன.

இத்தகைய ஆளுமைப் பாகுபாடுகள் பெண்ணியச் சிந்தனையாளர்களால் விமர்சனத்துக்குள்ளாகியிருப்பதுடன், ஆண் பெண் இருபாலருக்கும் ஏற்றத்தாழ்வில்லா ஆளுமைப் பண்புகள் வலியுறுத்தப்பட்டன. அன்புணர்வு, பொதுநலம், விடாமுயற்சி முதலானவை விரும்பத்தக்க ஆக்கப்பூர்வமான ஆளுமைப் பண்புக் கூறுகளாகும். எனவே இவ்வாய்வுக் கட்டுரை திலகவதியின் கல்மரம் புதினத்தில் பெண் ஆளுமைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை எடுத்துரைப்பதாக அமைகின்றன.

**ஆளுமைத்திறன்**

ஆளுமைத்திறன் என்பது உடல் வளத்தையும், வெளியழகையும் குறிப்பதல்ல. ஆளுமைத்திறன் என்பது அறிவையும் பண்பையும் இவைகளுடன் செம்மாந்த சான்றாண்மை நிறைந்த நல்ல தோற்றத்தையும் குறிப்பதாகும். ஆளுமைத்திறனானது தன்னூக்கத்தின் அதாவது ஒருவன் தன் அனுபவத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் தன்னைத்தானே ஊக்கப்படுத்திக் கொள்ளும் திறனே ஆகும்.

**ஆளுமை – சொற்பொருள் விளக்கம்**

ஒவ்வொரு படைப்பாளனுக்கும் தனித்தன்மை உண்டு. வாசகனைக் கவர்ந்திழுத்து தம் கருத்தை மனதில் நிறுத்தும் ஆற்றல்தான் படைப்பாளியின் ஆளுமைப் பண்பாகிறது. ஆளுமை என்பது தனித்தன்மை என்று பொருள்படும்.

ஆளுமை என்பதற்குரிய ‘பெர்சனாலிட்டி’ என்ற ஆங்கிலச் சொல் ‘பெர்சனல்’ என்ற இலத்தீன் சொல்லிலிருந்து உருவானதாகும். இச்சொல்லின் பொருள், நாடக நடிகர்கள் தங்களை அடையாளம் தெரியாமலிருக்க அவர்களின் முகத்தை மறைக்கப் பயன்படுத்திய முகமூடியைக் குறித்தது. எனவே, முதன் முதலில் ‘ஆளுமை’ என்பது ஒருவர் மற்றவர்களுக்கு எப்படித் தோற்றமளிக்கிறார் என்பதையே சுட்டியது.

ஆளுமை என்பதற்குத் “தனிமனிதனுடைய எண்ணங்கள், செயல்படும் முறை, நடத்தைகள், அவன் பிறருடன் பழகும் முறை, மனப்பான்மைகள், அவனுடைய வாழ்க்கைத் தத்துவம், அறிவாற்றல், உணர்ச்சிகள் ஆகிய யாவும் சேர்ந்த தொகுப்பிலிருந்து அவனுக்கு ஏற்படும் ஒரு தனித்தன்மையே ஆளுமை”[1] என்று வாழ்வியற் களஞ்சியம் குறிப்பிடுகிறது.

இதைப்போலவே கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் “ஆளுமை என்பது ஒரு மனிதனின் தனிப்பட்ட குணத்தொகுப்பு என்றும், மேலோங்கிய நிலை என்றும்”[2] விளக்கம்

*தருகிறது. இவ்வாறு ஆளுமை என்ற சொல்லுக்குப் பல்வேறு விதமான கருத்துகள் இருப்பதை நாம் உணரலாம்.*

***புதின ஆளுமையும், ஆளுமை குறித்த பெண்ணிய விளக்கமும்***

*மக்களைப் பற்றியும், நிகழ்ச்சிகள் பற்றியும் எடுத்துரைப்பதே புதினம் என்பர். "வாழ்க்கை பலவகையானது. புதின ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் எல்லாத் துறையும் பழக்கமாகியிருக்க முடியாது. ஆகவே ஒருவர் நன்றாக அறிந்த சில. நன்கு அறியாதன பல. அவர் எழுதும் புதினத்தில் நன்கு அறிந்தவற்றை மட்டும் விளக்கி எழுதுதல் போதும். அவ்வாறு எழுதும் கதையே கவர்ச்சி உடையதும் உண்மை உடையதுமாக விளங்கும்"[4] என்பார் மு.வரதராசனார். ஒரு படைப்பாளனின் அடிமனதில் உதித்த கதைக்கருதான் மெல்ல வளர்ந்து படைப்பிலக்கியமாகச் செழிக்கிறது.*

*உலகெங்கிலும் பெண்களுக்குக் கற்பிக்கப்பட்ட ஆளுமைப் பண்புகள் ஆணாதிக்க உளவியல், சமூகம், பண்பாடு ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டவையாகும். உடற்கூற்றின் அடிப்படையில் ஆண் உடலால் வலிமை கொண்டவன். அவனுக்கு வீரதீரச் செயல்கள் ஆளுமையாக விளங்கவேண்டும். பெண் மென்மையானவள் எனவே அஞ்சி மருள்வது அவளது ஆளுமையாகும் என்றும் ஆணாதிக்கச் சமுதாயம் ஆளுமையைப் பாகுபடுத்திக் கற்பிக்கின்றது. உதாரணத்திற்குத் தொல்காப்பியரின் இலக்கணச் சூத்திரங்களைக் குறிப்பிடலாம்.*

*"பெருமையும் உரனும் ஆடூஉமேனே" (தொல்.பொ.கள.7) என்ற சூத்திரப்படி பெருமையும் வலிமையும் ஆண்களின் ஆளுமைப் பண்புகளாகும்.*

*"அச்சமும் நாணும் மடனும் முந்துறத்*

*நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" (தொல்.பொ.கள.8) என்ற சூத்திரப்படி அச்சம், நாணம், மடம் ஆகியன பெண்களின் ஆளுமைப் பண்புகளாகும்.*

*இங்கு தொல்காப்பியரின் கூற்று கேள்விக்குள்ளாகிறது அதாவது, அறிவாற்றல் என்பது ஆணின் ஆளுமையாகவும், அறியாமை பெண்ணின் ஆளுமையாகவும் கற்பித்த ஆணாதிக்கக் கருத்தியலை இன்றைய பெண்ணியச் சிந்தனையாளர்கள் முறியடித்ததைக் குறிப்பிடலாம். பெண்ணின் படைப்பாக்க ஆளுமை ஆணின் படைப்பாக்க ஆளுமையிலிருந்து வேறுபட்டு ஆக்கப்பூர்வமானதாய் விளங்குவதைத் தமிழகப் பெண் படைப்பாளிகள் மெய்ப்பித்து வருகின்றனர். அவர்களது படைப்புகளில் படைக்கப்பட்ட பெண் கதாப்பாத்திரங்களும், ஆக்கப்பூர்வமான ஆளுமைத்திறன்களைப் பெற்றுத் திகழ்வதைக் காணலாம். அந்த அடிப்படையில் திலகவதியின் புதினத்திலும் ஆளுமைகள் வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகிறது.*

***திலகவதியின் படைப்பில் படைப்பாளுமைகள்***

திலகவதி தன் புதினங்களில் சமுதாயத்தில் நிலவும் கொடுமையான செயல்களையும் அநீதிகளையும் அஞ்சாமல் எடுத்துரைக்கின்றார். பெண் உரிமையை மானுடத்தின் விடுதலைத் தேடலாகவே பிரகடனம் செய்கின்றார்.

பெண்கள் சுரண்டப்படுவது இன்ன துறையில்தான் என்றில்லை. எந்தத் துறையும் சாராமல் வாசற்படி தாண்டி வெளிவராத நிலையில் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்ணும் கூட அன்றாடம் சுரண்டலுக்கு ஆளாகிக் கொண்டுதான் இருக்கிறாள். இவ்வாறான கருத்தையே மையமாகக்கொண்டு பெண் எழுத்தாளர்களிலிருந்து திலகவதி வேறுபடுகிறார். முற்றிலும் மாறுபட்ட கோணங்களில் பிரச்சனைகளை முன் வைக்கிறார்.

விரிந்து பரந்த சிந்தனையில், தன் அனுபவத்தின் துணை கொண்டு அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயன்று உள்ளார். பெண்ணின் அடிமை நிலை, அதனைப் போக்கத் தேவையான வழிமுறை, ஒரு பெண் மேற்கொள்ள வேண்டிய செயல்முறை, பிரச்சனைகள் நேரிடும் போது அவற்றைத் துணிவுடன் எதிர்த்து நின்று குழப்பம் இல்லாமல் எடுக்க வேண்டிய திடமான சிந்தனைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்ட கதைக்கருவை அனைத்துப் புதினத்திலும் உருவாக்கி குறிப்பாக 'கல்மரம்' புதினத்திலும் அதற்கேற்ற பாத்திரங்களைப் படைத்து தனது படைப்பாளுமைத்திறனை வெளிப்படுத்தியுள்ளார்.

**கல்மரம் புதினத்தில்வெளிப்படும் பெண் ஆளுமைகள் குறித்த கருத்துகள்**

**கல்மரம் புதினத்தின் கதைச்சுருக்கம்**

காசி வேலை கிடைக்காமல் என்றாவது கிடைக்கும் என்று நினைத்து சில்லரை வேலையைச் செய்து சம்பாதிக்கும் ஒரு குப்பத்து இளைஞன். எந்த வேலையும் ஒழுங்காகத் தெரியாதவன். அவனது தாய் ஆதிலட்சுமி மேஸ்திரியாக இருந்து வேலையின் போது விபத்தில் இறந்த தன் கணவனின் கதி, பிள்ளைக்கு வரக்கூடாது என்ற கவலையில் கல்லு வேலைக்குப் போகக்கூடாது என்று அவனிடம் சத்தியம் வாங்கிக் கொள்கிறாள்.

கடைசிப் பெண் காவேரி பத்தாவது படித்திருக்கும் துடிப்புள்ள பெண். சுசீலா முனைவர் பட்ட ஆய்வுக்கு கட்டிடத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறையை எடுத்துக் கொண்டு அவற்றைப் பற்றி ஆய்வு செய்ய வந்தவள். அவர்களுள் ஒருத்தியாகவே மாறிப்போனாள்.

காசிக்கு ராகினி என்ற பெண்ணை மணமுடிக்கிறாள் ஆதிலட்சுமி. ராகினி வசதியாக வாழ்ந்தவள். முதலில் இவர்களின் வீட்டைக் கண்டு முகம் சுளித்தாள். கொஞ்ச நாளிலே காசிக்கு தன் அண்ணன் மூலமாக வாட்ச்மேன் வேலையை வாங்கிக் கொடுக்கிறாள். ஆர்.ஆர்.எம் என்ற

முதலாளி அடுக்குமாடி கட்டிடம் ஒன்றைக் கட்டுகிறார். அக்கட்டிடத்தின் அருகிலேயே ராகினிக்கும் காசிக்கும் தங்கும் அறையை கட்டிக் கொடுக்கிறார்.

அங்கே குடியேறும் காசி ஓரளவு கையில் காசு பார்க்கிறான். அங்கேயே ராகினிக்கும் கணக்கர் வேலை கிடைக்கிறது. முதலில் முதலாளிக்கு விசுவாசமாக நடந்து கொள்கிறாள். தொழிலாளர்களின் வருத்தமும், அவர்களின் பிரச்சனைகளும் அவள் கண்டுகொள்ளவில்லை. நாட்கள் செல்ல அவளுக்கு அங்கு நடப்பவை பற்றி தெரிந்தது. அந்த ஆர்.ஆர்.எம் முதலாளி மனிதாபிமானமில்லாமல் தொழிலாளர்களை நடத்தும் விதத்தையெல்லாம் இவர்கள் காண நேர்கிறது.

உழைப்புச் சுரண்டலையும் பாதுகாப்பில்லாத எளிய மக்களின் வாழ்க்கையையும் காணும் ராகினி மனம் மாறி அவர்களுக்கான வாழ்க்கையை பயனுள்ளதாக மாற்ற எண்ணுகிறாள். சுசீலா அமைக்க நினைக்கும் யூனியன் நிறுவனம் பணியில் கைகொடுத்து கொத்தனார் பயிற்சிக்கும் விண்ணப்பித்துச் சேருகிறாள்.

தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய சம்பள பாக்கியை சங்கத்தின் மூலம் எப்படி வாங்கலாமெண்று தொழிலாளர்களுக்குச் சொல்லி நம்பிக்கையூட்டுகிறாள்.

**கல்மரம் புதினத்தில் சுயமரியாதையுள்ள பெண்கள்**

திலகவதியின் கல்மரத்தில் காணப்படும் பெண்கள் சுயமரியாதையை விரும்புபவர்களாக உள்ளனர். எத்தகையச் சூழலிலும் சுயமான சிந்தனை கொண்டவர்கள்.

கல்மரம் புதினத்தில் ராகினி, கஸ்தூரி, சுசீலா போன்றோர் சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்ற எண்ணமுடையவர்கள். ஆர்.ஆர்.எம் என்ற முதலாளி கட்டிடத் தொழிலாளர்களைத் தரக்குறைவாக பேசுவதும் உதாசீனப்படுத்துவதும் இவர்களால் தாங்க முடியவில்லை.

''மத்தவங்களுக்குக் கைகட்டி பயந்து நின்னுகிட்டு தொழில்னு எதையும் பண்ணாம சம்பளம் வாங்கறது அவமானம் தான். ஆர்.ஆர்.எம் பேசற பேச்சுகளை நினைச்சாலே எனக்கு வெறுப்பாயிருக்குது. கையிலே நமக்குன்னு தொழில் ஒண்ணு இருந்தா யாருக்கும் தலைகுனியாம, பயப்படாம, கௌரவத்தை விட்டுக் கொடுக்காம வாழலாம்''[5] என ராகினி தன் சுயமரியாதைச் சிந்தனையை வெளிப்படுத்துகிறாள்.

சுசீலா கட்டிடத்தொழிலாளிகளுக்காகப் பாடுபடுகிறாள். அதிலும், பெண்கள் கட்டிடத் தொழிலில் சிறந்து விளங்கவேண்டும், என்று பெண்கள் பற்றிய சுயமரியாதைச் சிந்தனையை வெளிப்படுத்துகிறாள்.

**கல்மரம் புதினத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள்**

'கல்மரம்' புதினத்தில் வரும் ஆதிலட்சுமி, காவேரி, கன்னியம்மாள், ராகினி, கம்சலை போன்ற பெண்கள் கட்டட வேலைக்குச் செல்பவர்களாக படைக்கப்பட்டுள்ளனர். தினக்கூலியை நம்பி வாழ்க்கை நடத்துபவர்களாகவும், வறுமையில் வாடுபவர்களாகவும் படைக்கப்பட்டுள்ளனர்.

**கல்மரம் புதினத்தில் அறிவுப்பூர்வமான பெண்கள்**

'விதியையும் மதியால் வெல்லலாம்' என்பது பழமொழி. தன் வாழ்வின் போக்கை திசைமாற்றி திறம்பட வாழ்பவர்களாக திலகவதியின் பெண் பாத்திரங்கள் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. 'கல்மரம்' புதினத்தில் சுசீலா, ராகினி, கஸ்தூரி போன்ற பெண்கள் அறிவார்ந்த பெண்களாகப் புதினத்தில் காணப்படுகின்றனர். கட்டிடத் தொழிலாளர்கள் பிரச்சனையில் சிக்குண்டு தவிக்கும் போது அவர்களுக்கு வழிகாட்டியாக பாதுகாப்புக்கான செயல்களைச் செய்யக் கூடியவர்களாக இந்தப் பெண்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

**கதைக்களமும் ஆளுமையும்**

திலகவதி தம் புதினத்தில் அமைத்திருக்கும் கதைக் களங்கள் அற்புதமானதாகவும், தத்ரூபமானதாகவும் அமைந்துள்ளது. தான் எடுத்துக் கொண்ட கதைக்களமும் அவை சொல்லப்படும் முறையும் படிப்போரை அந்த இடத்திற்கே அழைத்துச் செல்வதாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 'கல்மரம்' புதினத்தில் "கொத்துக் கரண்டியும் மட்டப் பலகையும் இரண்டாவது தளத்திலிருந்து சட்டென்று கீழே விழுந்ததும் அஞ்சலை திகைத்துப் போய்விட்டாள். கீழே இருந்து சிமெண்டும் சரளைக் கற்களும் நிறைந்த தலைச்சுமையுடன் சாரத்தின் மேல் ஏறிவந்து கொண்டிருந்த கம்சலையின் கால்மீது கொத்துக் கரண்டி சளாரென்று விழுந்தது. விழுந்த வேகத்தில் ரத்தம் பீறிட்டது. கம்சலை துடித்துப் போனாள்"[6] என கட்டிட வேலையில் ஈடுபடும் சூழலில் நடைபெறும் நிகழ்வுகளைப் படிப்போரும் உணரும் வகையில் படைத்துள்ளார்.

புதினத்தில் கதைக் களங்களும், கதை மாந்தர்களின் சொல்லாற்றலும் ஆசிரியரின் கதையமைப்பிற்கு ஏற்ப பொருத்தமாக அமைந்திருப்பது அவரின் பரந்துபட்ட அறிவின் விசாலத்தை தெளிவுபடுத்துகிறது.

**முடிவுரை**

காவல்துறையின் உயர்பதவி வகித்த ஆசிரியர், படைப்புலகிலும் தனக்கென ஒரு தனியிடத்தை பெற்றுத் திகழ்கிறார். அதற்குக் காரணம் அவரின் பரந்துபட்ட அறிவும், ஆளுமைத்திறனுமே ஆகும். காவல்துறை அதிகாரியாக இருந்து கொண்டு நாட்டின் பல்வேறு பிரச்சனைகளையும், ஒழுக்க சீர்கேடுகளையும் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளையும் கண்ட

ஆசிரியர் அதனை 'கல்மரம்' புதினத்தில் படைத்து சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் அது மிகையாகாது. இவர் எண்ணற்ற சிறுகதைகளும், புதினமும், கவிதைகளும் படைத்துள்ளார். அவரின் ஆளுமைத்திறனை மேம்படுத்திக் கொண்டதோடு தான் படைத்த பாத்திரங்களையும் கதைக் களத்திற்கு ஏற்ப பயன்படுத்தி தனது படைப்பாக்க ஆளுமையையும் ஆசிரியர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

**அடிக்குறிப்புகள்**

1. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி –II, ப.678.
2. கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.85.
3. மு.வரதராசனார், இலக்கிய மரபு, ப.110.
4. திலகவதி, கல்மரம், ப.829.
5. மேலது, ப.780.

**துணைநூற்பட்டியல்**


**1.** பாலுச்சாமி.நா – "வாழ்வியல் களஞ்சியம்" தொகுதி- 8, தஞ்சை பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சை – 1991.

2. முத்துக்கண்ணப்பர்.தி – "கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி" ,கிரியா வெளியீடு, சென்னை,1998.

3. வரதராசனார். மு – "இலக்கிய மரபு" பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு – 1997.

4. திலகவதி – "திலகவதி நாவல்கள்" (தொகுதி – 2), புதுமைப்பித்தன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு – 2004.


புதிய அவை